Enrich, XIV(I): 9 - 14, July – Dec., 2022

# சுவாமியும் நண்பர்களும் நாவலில் பள்ளிப்பருவக் குழந்தைகளின் உளவியல் பாங்கு

முனைவர் செ. நாகஜோதி
உதவிப்பேராசிரியர், உயராய்வு மையம், தமிழ்த்துறை
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

**ஆய்வுச்சுருக்கம்**

“இலக்கியம் ஒரு படைப்பாளியின் கைதேர்ந்த செய்திறனால் மட்டுமல்ல. பிரத்தியேகமான ஒரு மன எழுச்சியினாலும் அமைவதாகும். ஒரு மனத்தின் வழியாக இன்னொரு மனத்துடன் அது பேசுகிறது, மனித வாழ்வின் அனுபவங்களையும் மனித நடத்தையையும். அவற்றிற்கு அடிப்படையாக உள்ள மனத்தையும் ஆழமாகவும் அழகாகவும் சித்தரிக்க முயலுகிறது,” என்பார் தி.சு.நடராஜன். (திறனாய்வுக்கலை ப - 88 பதிப்பு -2016 ) இத்தகையப் போக்கில் ஆர்.கே.நாராயணன் அவர்கள் எழுதிய Swamy and Friends என்ற நாவலை சுப்ரா என்பவர் தமிழாக்கம் செய்துள்ளார். இந்நாவலில் இடம்பெறும் கதைமாந்தர்கள் எதார்த்தமான போக்கில் படைக்கப்பட்டுள்ளனர். பள்ளிச்சிறுவர்களை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ள இந்நாவலில் பள்ளிப்பருவக் குழந்தைகளின் மனநிலையினை அறிய முற்படுவதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வானில் உரைநடை இலக்கியமாகிய நாவல் நீண்ட கதைப்போக்கு கொண்டது. பல்வேறு கதையம்சங்களை வெளிப்படுத்தவல்லது. கதாமாந்தர்களின் வாழ்வை மையப்படுத்தி. எதார்த்தப்போக்குடன். உளவியல் பாங்குடன் எழுதப்படும். நாவல் பலரால் விரும்பி வாசிக்கப்படுகிறது, இவ்வடிப்படையில் 1906- ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி மைசூரில் பிறந்த ஆர்.கே..நாராயணன் 1935 இல் ‘Swamy and Friends’ என்னும் நாவலை எழுதியுள்ளார். இந்நாவல் மால்குடி என்னும் கற்பனைக் கிராமத்தைத் தழுவி எழுதப்பட்டதாகும். உலகம் முழுவதும் உள்ள வாசகர்களை இரசிக்கும்படி செய்தவர் ஆர்.கே. நாராயணன் ஆவார். இந்திய அரசு இவரைச் சிறப்பிக்கும் விதத்தில் மைசூரிலிருந்து யஷ்வந்பூர் வரை செல்லக்கூடிய விரைவுத் தொடருந்துக்கு மால்குடி விரைவுத் தொடருந்து எனப் பெயரிட்டுள்ளது. இந்தியாவில் கற்பனை ஊரின் பெயர் கொண்ட ஒரே தொடருந்து என்ற பெருமை பெற்றது. இத்தகைய நாவலை சுப்ரா என்பவர் 1998 இல் சுவாமியும் நண்பர்களும் என மொழிபெயர்த்தார். 19 தலைப்புக்களால் 200 பக்கங்கள் கொண்டது. இந்நாவல் பல்வேறு கோணங்களில் ஆராயவல்லது. எனினும் உளவியல் ரீதயான ஆராய்ச்சி இந்நாவலுக்குச் சிறப்பிடம் எனலாம்.. இவ்வடிப்படையில் “சுவாமியும் நண்பர்களும” என்ற நாவலில் சிறுவர்களின் அச்சவுணர்வு. சினவுணர்வு,. பொறாமையுணர்வு. மனவெழுச்சிசார் காப்புணர்ச்சி ஆகிய மனநிலையினை உளவியல் கோட்பாட்டில் அறிய முயல்வதாக இக்கட்டுரை அமைகிறது,.

**உளவியல் - விளக்கம்**

திறனாய்வின் பல வகைகளுள் ஒன்று உளவியல் ஆகும். இலக்கியத்தில் வெளிப்படும் கதை மாந்தர்களின் உணர்வுகளை. செயல்களை வெளிப்படுத்துவது அதன் தன்மையாகும்.

உளவியல் பற்றி தி.சு.நடராசன், “உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் அதன் விழைவுகளையும் விளைவுகளையும் ஆராய்கிற ஓர் அறிவியலாகும்” என்றும் “மனம் என்பதை அதன் நனவுநிலை அனுபவங்கள் கொண்டு அறியலாம்” என்றும் “நனவுநிலை அனுபவங்களின் கூறுகளாகப் புலன் உணர்ச்சி (Sensation) உணர்வுகள் (Feelings) மனபிம்பங்கள் போன்றவை அமைகின்றன” என்றும் அறிவுசார் மன இயக்கத்தின் வடிவமைப்பையும் தன்மையையும் கண்டறிய அகநோக்கு முறையே ஏற்புடையது என்றும் உரைத்தனர்” மேலும் “உளவியல் என்பது மனித மற்றும் விலங்கு நடத்தையை ஆராய்வதோடு, நடத்தையுடன் தொடர்புடைய அக மற்றும் புறச்செயல்களையும் ஆராய்ந்தறிவதாகும்” (திறனாய்வுக்கலைப - 88. பதிப்பு - 2016) எனக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியம் சுட்டியுள்ள

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப” (தொல்காப்பியம் நுர - 253)

என்ற எண்வகை மெய்ப்பாடும் ஒருவகையான உளவியல் கோட்பாடு எனலாம்.

**கதைப்போக்கு**

மால்குடியில் வசிக்கும் 10 வயதுச்சிறுவன் சுவாமிக்கு வகுப்பு நேரம் வெறுப்பு. தோழர்களோடு விளையாடுவது மகிழ்ச்சி. போலீஷ்காரர் மகன் ராஜம் என்பவன் புதிதாகப் பள்ளியில் சேர்கிறான். சுவாமி தன் புதிய தோழன் ராஜத்தைப் பற்றி பெருமையாகத் தன் பாட்டியிடம் பேசி மகிழ்கிறான். சுவாமியின் மற்ற நண்பர்களாகிய சோமு சங்கர், பட்டாணி போன்றோர் ராஜத்திற்கு வால் பிடிப்பவன் சுவாமி என்று கேலி பேசுகின்றனர். ராஜம் யாரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது எனக் கருதுபவன். சுவாமி தேர்வுக்கு அச்சப்படுபவன். விடுமுறை நாட்களில் சைக்கிள் சக்கரத்தை வைத்து விளையாடுவதில் ஆசை கொண்டவன். கதர் ஆடை போராட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக சுவாமியைப் பள்ளி தலைமையாசிரியர் அடித்தார். இதனால் சுவாமி தன் புத்தகங்களை அள்ளிக் கொண்டு உங்க பள்ளிக்கூடமும் நீங்களும் எனக்கூறி பள்ளியைவிட்டு ஓடிவிட்டான். ஆல்பர்ட மிஷன் ஸ்கூலிலிருந்து போர்ட் ஸ்கூலில் சேர்ந்தான். கிரிக்கெட் ஆர்வம் கொண்ட ராஜம். மணி, சுவாமி ஆகியோர் எம்.சி.சி எனத் தம் குழுவுக்குப் பெயர் வைத்து ஒய்.எம்.யூ கிரிக்கெட் குழுவோடு விளையாட பயிற்சி எடுத்தனர். மாலையில் ட்ரில் வகுப்பு முடிந்து கிரிக்கெட் பயிற்சிக்குச் செல்ல தாமதம் ஆவதால் பல நாட்கள் சுவாமி ட்ரில் வகுப்புக்குச் செல்லவில்லை. தலைமையாசிரியர் ட்ரில் வகுப்புக்கு வராத சுவாமியை அடிக்க வந்தார். அப்போது சுவாமி தலைமையாசிரியரின் கையைப் பிடித்தான். இதனால் வீட்டுக்கு வர பயந்த சுவாமி 2 நாட்கள் வராமல் எங்காவது சுற்றித் திரிந்துவிட்டு மேட்ச்க்கு வந்து விட வேண்டும் என நினைத்தான். சுவாமி வீட்டுக்கு வர பயந்து வெகுதூரம் நடந்தவன் பாதை மாறி காட்டுக்குள் சென்று விட்டான். இருட்டில் எங்கு இருக்கிறோம் என்பதையும் அறியமுடியவில்லை. அச்சத்தோடு சாலையில் மயங்கினான். அவ்வழியாக வந்த ஒரு வண்டிக்காரன் சுவாமியை வனத்துறையிடம் ஒப்படைத்தான். கண் விழித்த சுவாமி போலீஸ்காரரிடம் இன்று என்ன கிழமை என்று கேட்டான். அவர் ஞாயிற்றுக்கிழமை என்றவுடன் உடனே தன்னைக் கொண்டுபோய் மால்குடியில் விட்டுவிடுங்கள் கிரிக்கெட் மேட்சுக்குப் போயே ஆக வேண்டும் என்றான். போலீஸ்காரர் இன்று சனிக்கிழமை என்று பொய் சொன்னார். அவனுக்காகக் காத்து ஓய்ந்து போனார்கள் நண்பர்கள். ஒய்.எம்.யூ

குழுவோடு தோற்றுவிடும் நிலையில் எம்.சி.சி குழுவினர் விளையாடிக்கொண்டிருந்தனர். ராஜம் தன்னிடம் பேச விரும்பாததை சுவாமி மணியிடம் சொல்லிப் புலம்புகிறான் எம்.சி.சி மேட்சையே அழித்துவிட்டதன் கோபம் ராஜத்திற்கு என்றான் மணி. ராஜம் குடும்பத்தார் திருச்சிக்குச் செல்லப் போகிறார்கள் என்பதை அறிந்தான் சுவாமி. ராஜம் கிளம்புவதற்கு முந்தைய நாள் மணி அவனது வீட்டில் தங்கப் போவதாகச் சொன்ன போது சுவாமியின் மனம் பொறாமையில் நிறைந்தது. ராஜத்தை எப்படியாவது பார்த்து விடவேண்டும் என்று நினைத்தான் சுவாமி. பேரி டேல்ஸ் என்ற புத்தகத்தை அவனுக்குக் கொடுக்கக் கருதி அன்பிற்குரிய நண்பன் ராஜத்திற்கு என எழுதி வைத்தான். மறுநாள் ரயில் நிலையத்திற்குச் சென்ற சுவாமி ராஜத்தை நேரில் சந்தித்துப் புத்தகத்தைக் கொடுக்கப்பயந்து மணியிடம் கொடுத்தனுப்பினான். அப்போது ராஜம் தன்னை நினைப்பானாடா என்று புலம்பினான். உனக்குக் கடிதம் போடுவாண்டா என்றான் மணி.. வியந்த சுவாமி அவனுக்கு என் முகவரியே தெரியாதே என்றான். எங்கிட்ட கேட்டான் என்று சொன்ன மணியிடம் எங்கே என் முகவரியைக் கூறு என்றான் சுவாமி. ராஜத்தோடு தன்னைச் சேர விடக்கூடாது எனப்பொய் சொல்கிறான் மணி என்பதை சுவாமி புரிந்து கொண்டான். என்கிறார் சுப்ரா..

**அச்ச உணர்வில் சிறுவர்கள்**

மனிதாகள் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு உணர்வுகளுக்கு ஆட்பட்டு ,பிறரைச்சார்ந்து வளர்கின்றனர். இத்தகையோர் குழந்தைப் பருவத்தில் உறவை நம்புவதை விட நட்பில் அதிக ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டிருப்பர். “நட்பு பற்றி புரியாத சிறுவர்கள் பிற குழந்தைகளின் போட்டியைப் பற்றி அச்சப்படுவது இயற்கை. பள்ளிப்படிப்பிலும் விளையாட்டுக்களிலும் நட்பிலும் தோற்றுவிடுவோமோ என்ற அச்சம் குழந்தைகளைப் பற்றிக்கொள்ளும்”. (அ.மீனாட்சி சுந்தரம். கற்றல் மற்றும் மனித வளர்ச்சி பு 94 ) இக்கூற்றுக்கேற்ப மணியின் மனநிலையை அறிய முடிகிறது. சுவாமியின் வகுப்பிற்கு போலீஷ்காரர் மகன் ராஜம் என்பவன் புதிதாகச் சேர்கிறான். அவனை சுவாமிக்கு மிகவும் பிடிக்கிறது. ஆனால் மணி என்பவன் தன்னை மட்டுமே தோழர்கள் சுற்றி சுற்றி வரவேண்டும் எனக் கருதுகிறான். ஆதலால் ராஜத்தைப் பல வேளைகளில் தொந்தரவு செய்கிறான் “நீயெல்லாம் மனுசனா என்று எழுதி சுவாமியிடம் கொடுத்து ராஜத்திடம் கொடுக்க வைக்கிறான்.” (ஆர்.கே.நாராயணன் தமிழாக்கம் சுப்ரா .சுவாமியும் நண்பர்களும் ப - 6) ராஜம் அதைக் கசக்கிக் கீழே போடுகிறான். மறுபடியும் தொந்தரவு செய்து நல்லப்பா தோப்புக்கு வரும்படிக் கூறுகிறான் மணி. ஏனெனில் அவனை சரயூ ஆற்றங்கரையில் தள்ளிவிடத் திட்டம் தீட்டுகிறான். ஆனால் ராஜம் துப்பாக்கியோடு வந்ததைக்கண்ட மணி சமாதானமாகி நல்ல தோழமையோடு இணைகிறான். மணி - சுவாமியின் தோழமையில் பிரிவு ஏற்பட்டு விடுவோமோ என்ற அச்சம் தவறான போக்கில் செயல்பட வைத்துள்ளது. “சிறுவர்களின் மனம். எதிர்காலத்தில் பின்னர் நிகழக்கூடிய ஆபத்துகளுக்கும் கற்பனையில் தோன்றும் ஆபத்துகளுக்கும் அச்சப்படத் தொடங்குகிறது. விலங்குகளைக் கண்டு அச்சம். இருட்டைக் கண்டு அச்சம். பெரியவர்களது நடத்தையைப் பார்த்தும் பல குழந்தைகள் அச்சப்படுகின்றன.” (அ.மீனாட்சி சுந்தரம். கற்றல் மற்றும் மனித வளர்ச்சி ப -94) என்பர். சுவாமி விடுமுறை நாட்களில் சைக்கிள் சக்கரத்தின் மீது கொண்ட நீங்காத ஆசையால். அதை நினைத்தே கனவில் மிதந்தான். ஒரு குதிரை வண்டிக்காரனிடம் தன் குமுறலைச் சொன்னான். அக்குதிரை

வண்டிக்காரன் தன்னிடம் ஆறு ரூபாய் கொடுத்தால் ஏற்பாடு செய்து தருவதாகக் கூறினான். வண்டிக்காரனின் சூழ்ச்சியை அறியாத சுவாமி வண்டிக்காரனிடம் பைசா கொடுத்து ஏமாந்தான். குதிரை வண்டிக்காரனின் மகனால் அச்சப்பட்ட சுவாமி பல இன்னல்களுக்கு ஆட்பட்டான். மாலையில் ட்ரில் வகுப்பு முடிந்து கிரிக்கெட் பயிற்சிக்குச் செல்ல தாமதம் ஆனதால் சுவாமி ட்ரில் வகுப்புக்குச் செல்லவில்லை. தலைமையாசிரியர் ட்ரில் வகுப்புக்கு வராத சுவாமியை அடிக்க வந்தார். அப்போது சுவாமி தலைமையாசிரியரின் கையைப் பிடித்தான். இதனால் வீட்டுக்கு வர பயந்த சுவாமி 2 நாட்கள் எங்காவது சுற்றித் திரிந்துவிட்டு மேட்சுக்கு வந்து விட வேண்டும் என நினைத்தான். சுவாமி வீட்டுக்கு வர பயந்து வெகுதூரம் நடந்தவன் பாதை மாறி காட்டுக்குள் சென்று விட்டான் இருட்டில் எங்கு இருக்கிறோம் என்பதையும் அறியமுடியவில்லை. அச்சத்தோடு சாலையில் மயங்கினான். தலைமையாசிரியரை எதிர்த்த சுவாமி அச்சத்தால் தான் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் அலைவதை அறியமுடிகிறது.

**சினவுணர்வில் சிறுவர்கள்**

“சினம் என்பது சிறு எரிச்சல் முதல் பெருங்கோபம் வரையுள்ள மனநிலையைக் குறிப்பதாகும். அச்சத்தைக் காட்டிலும் சினமே சிறு குழந்தைகளிடம் பொதுவாகக் காணப்படுகிறது. கீழ்ப்படியாமை, சொல்வதற்கு நேர்மாறானவற்றைச் செய்தல். எதிர்மறை நிலை முதலியவை சினத்தின் மறைமுக வெளிப்பாடுகளாகும்.” (அ.மீனாட்சி சுந்தரம். கற்றல் மற்றும் மனித வளர்ச்சி ப -95) என்பர். 1930 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 15 அரசியல்வாதியான கௌரி சங்கரைக் கைது செய்ததை எதிர்த்துப் போராட்டம் நடக்கிறது. இப்போராட்டத்தை பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த சுவாமி காண்கிறான். அந்நியரை எதிர்க்கக் கருதிய சுவாமிநாதன் காந்திஜிக்கு ஜே என்று கத்தினான். அந்நியத்துணிகளை எரிக்கும் இடத்தில் நின்ற சுவாமி தன் குல்லாவையும் தூக்கி எறிகிறான். மறுநாள் பள்ளிக்குச் சென்ற சுவாமியைத் தலைமையாசிரியர் நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை என அதட்டினார். நீ நேத்து சன்னலை உடைச்சிருக்கிறாய் என்று அடி கொடுத்தார். பிரம்படிபட்ட சுவாமி வேகமாகப் புத்தகங்களை அள்ளிக் கொண்டு உங்க பள்ளிக்கூடமும் நீங்களும் எனக் கூறி ஓடிவிட்டான். (ஆர்.கே.நாராயணன் தமிழாக்கம் சுப்ரா .சுவாமியும் நண்பர்களும் ப - 119) தலைமையாசிரியர் சுவாமியை அடித்ததன் காரணத்தைப் புரிந்து கொள்ள இயலாத பருவத்தால் அவன் பள்ளிக்கூடத்தை விட்டே ஓடத் துணிந்தான். தலைமையாசிரியா் மீது கொண்ட சினம் சுவாமியை நேர்மாறாகச் செயல்படத் தூண்டுகிறது என உணரமுடிகிறது.

**பொறாமைவுணர்வில் சிறுவர்கள்**

“சமூகத்தில் பிறரது நடத்தையை உற்று நோக்கும்போதும் தனது உரிமையில் பிறர் குறுக்கிடும்போதும் தனது பள்ளி நண்பன் தன்னைப் புறக்கணிக்கும்போதும் பொறாமை எழலாம்” என்பர். (அ.மீனாட்சி சுந்தரம். கற்றல் மற்றும் மனித வளர்ச்சி ப -96) இக்கூற்றுக்கேற்ப சுவாமியின் மனநிலையை அறிய முடிகிறது. ராஜத்தின் அப்பாவுக்கு வேலைமாற்றமானதால் குடும்பத்தோடு திருச்சிக்கு செல்லப் போகிறார்கள் என்பதை அறிந்தான் சுவாமி. ராஜம் கிளம்புவதற்கு முந்தைய நாள் மணி அவனது வீட்டில் தங்கப் போவதாகச் சொன்னான். அப்போது “ஒரு கணம் சுவாமியின் மனம் பொறாமையில் நிறைந்தது. மணி ராஜத்துடன் அன்றைய இரவு தூங்கப்போகிறான்’ நடுஇரவு வரை பேசிச் சிரித்து கும்மாளம்

போடப்போகிறார்கள். தான் மட்டும் இங்கே புறக்கணிக்கப்பட்டு விடுவோம் எனக் கருதிய சுவாமி மணியை எப்படியாவது போகா விடாமல் நிறுத்திவிடத் துடித்தான்.'' (ஆர்.கே.நாராயணன் தமிழாக்கம் சுப்ரா .சுவாமியும் நண்பர்களும் ப- 196 ) என்கிறார் சுப்ரா. இதன் மூலம் சிறுவர்கள் தனக்கு விருப்பமான நண்பன் தன்னிடம் பேச விரும்பவில்லையென்றால் அத்தகையவனோடு வேறு நண்பர்கள் நட்பு கொள்வதைக் கண்டு பொறாமைப்படுவர் என உணர்ந்து கொள்ள முடிகிறது.

**மனவெழுச்சிசார் காப்புணுர்ச்சி**

சிறுவர்களில் பெரும்பாலானோர் அச்சம், சினம், பொறாமையுணர்வு கொண்டிருப்பர். சிலர் மனவெழுச்சியுடன் செயல்பட்டு காப்புணர்ச்சி கொண்டிருப்பர். ''காப்புணர்ச்சியின் கூறுகள் நல்ல உடல்வளர்ச்சியும் மனவளர்ச்சியும் தோன்றும். ஒழுங்கான வாழ்க்கை காப்புணர்ச்சிக்கு உதவும்.'' (அ.மீனாட்சி சுந்தரம். கற்றல் மற்றும் மனித வளர்ச்சி ப -112) என்பர். சுவாமி ராஜத்தோடு நட்பு கொள்வதை விரும்பாத மணி ராஜத்திற்குப் பல தொல்லைகள் செய்தான். அவனை நதியில் தள்ளிவிடச் சதித்திட்டம் தீட்டினான். மறுநாள் ராஜம் துப்பாக்கியோடு வந்து நின்றான். வானைப் பார்த்து துப்பாக்கியால் சுட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சித்தான். பின்னர் அனைவரும் நட்பு கொண்டனர். ராஜம் யாரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகத் தன் வகுப்புத் தோழர்களைத் தன் வீட்டுக்கு வரவழைத்திருந்தான். இது ஒருவருக்கொருவர் தெரியாது. ராஜம் வீட்டுக்கு வந்த பிறகுதான் ஒருவருக்கொருவர் அறிந்து கொண்டனர். யாரும் பகைமை உணர்வோடு இருக்கக் கூடாது என்பதற்குக் கதை சொல்லி ஒற்றுமையாக்கினான் ராஜம். இதன்மூலம் ராஜம் மனவெழுச்சியோடு தன்னைக் காப்பாற்றிக் கொண்டதோடு தோழர்களை நல்வழிப்படுத்துபவனாகவும் செயல்படும் காப்புணர்ச்சி மிக்கவனாகவும் வெளிப்படுகிறான் என உணரமுடிகிறது.

**முடிவுரை**

''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது'' என்பதை அறிந்த ஒவ்வொரு பெற்றோரும், ஆசிரியரும் சிறுவர்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பர். ஆனால் அதையும் மீறி பள்ளிச்சிறுவர்களில் சிலர் அச்சவுணர்வாலும் பொறாமையுணர்வாலும் தவறான செயலில் ஈடுபடுவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 'சுவாமியும் நண்பர்களும்' என்ற நாவலில் சுவாமி மற்றும் மணி அச்சவுணர்வும். சினமும். பொறாமையுணர்வும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ராஜம் போன்ற நல்ல இயல்புடைய சிறுவர்களும் உள்ளனர். இத்தகைய நிலைக்குக் காரணம் சிறுவர்களுக்கு அமையப்பெற்ற குடும்பச் சூழலும். ஆசிரியர்களும் எனலாம். ''சுவாமியும் நண்பர்களும்'' என்ற நாவலில் எதிர்மறை எண்ணம் கொண்ட சுவாமி பற்றியும் சுயநலம் கொண்ட மணியின் மனநிலை பற்றியும். நேர்மறை எண்ணம் கொண்ட ராஜத்தின் மனநிலை பற்றியும் அறிய முடிந்தது.

**முதன்மை ஆதாரம்**

1. ஆர்.கே.நாராயணன் தமிழாக்கம் சுப்ரா .சுவாமியும் நண்பர்களும்
வெளியீடு ' இயக்குநர். நேஷனல் புக் டிரஸ்ட் . இந்தியா புது தில்லி
முதற்பதிப்பு 1998

**துணைமை ஆதாரங்கள்**

1 .தி.சு.நடராசன் - திறனாய்வுக்கலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட் பத்தாம் பதிப்பு -2016

2 அ.மீனாட்சி சுந்தரம். கற்றல் மற்றும் மனித வளர்ச்சி

3. தொல்காப்பியம் செண்பகா பதிப்பகம் -2010